

மாடஸ்டி பிளைஸி
தோன்றும்
புலி வருது!
ரூ.5/-



வாசக நண்பர்களே,

வணக்கம்! **"புலி வந்து விட்டது!"** இந்த மாத லயனின் தலைப்பையும் மாடஸ்டி கதையையும் தான் நான் குறிப்பிடுகிறேன் என்பதை யூகித்திருப்பீர்கள்! பல மாதங்களாக விளம்பரப்படுத்தப்பட்ட மாடஸ்டியின் இந்த சாகஸம் நிச்சயம் உங்களைக் கவரும்! படித்து விட்டு நிறை / குறைகளைச் சுட்டிக்காட்டி எழுதுங்களேன்!

சென்ற மாத வெளியீடான ரிப் கிர்பியின் **"கம்ப்யூட்டர் கொலைகள்"** கதைக்கு நிறைய complaints. பெரும்பாலான வாசகர்கள் கதை சொதப்பலாக; ஆக்ஷன் இல்லாமல் இருந்தது என்று அபிப்ராயப்பட்டுள்ளனர்! இந்த இன்டர் - நெட் யுகத்தில் வாசகர்களின் வேகத்திற்கு ரிப் கிர்பியால் ஈடு கொடுக்க முடியவில்லை என்பது புரிகிறது! So - ரிப் அதிரடியான ஆக்ஷன் சாகஸங்களோடு வரும் வரை அவருக்குத் தற்காலிக ஓய்வு கொடுத்து விடுவோம்! ஓ.கே. தானே?

அடுத்த இதழாக மின்னல் படையினரின் **"மேகக் கோட்டை மர்மம்"** ரூ. 5/- விலையில் தூள் கிளப்ப வருகிறது! உலக யுத்தப் பின்னணியில் - அட்டகாசமான சஸ்பென்ஸ் த்ரில்லராக இது அமையும்!

**"தீபாவளி மலர்"** டெக்ஸ் வில்லரின் சாகஸத்தோடு தயாராகி வருகிறது! வழக்கமான டெக்ஸ் ஸ்டைலில் - ஏராளமான ஆக்ஷனோடு; கார்ஸன், கிட் குழுவினரோடு இந்தக் கதை நிச்சயம் சூப்பர் - ஹிட்டாக அமையப் போகிறது!

டிசம்பரில் கேப்டன் பிரின்ஸ் மீண்டும் entry ஆகிறார்! விபரம் விரைவில்!

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்! அது வரை - good bye!

அன்புடன்,
**S. விஜயன்.**

பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 72649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி 626 123.

வருகிறது!




நவம்பர் 1-ல் கிடைக்கும்!


'புலி
வருது!'
வட துருவத்து லாப்லாந்தியர்கள் குளிர்காலம் வந்ததும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள்...
ஐன்ஸ்டைனின் யுனிபைடு பீல்டு தியரி என்ன சொல்கிறது என்றால்...
ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா என்றொரு பழமொழி -தெரியுமா... அம்ப்ரோஸ்?
வேண்டாமே...! அவரை விட்டுவிடுங்கள்!
ஓரிடத்தில் அவர்கள் முகாமிட்டுத், தங்கினார்கள்
உணவு தயார் அம்ப்ரோஸ்!
பொறு... அன்னி - இந்தக் குறிப்பை எழுதி முடித்து விட்டு வருகிறேன்!
உங்களுடைய கணக்கை எழுதி முடிக்க பத்து வருடம் ஆகும் என்றீர்களே-சாப்பிட வாருங்கள். அதை அப்புறம் தொடரலாம்!
இது சாதாரண கணக்கு இல்லை அன்னி... நான் முயற்சிக்கும் இந்த கணித தேற்றம் பிரபஞ்சப் புதிர்கள் பலவற்றிற்கு விடை சொல்லும்...
சரி...! இப்போது சாப்பிட வாருங்கள்!


உங்களுடைய பிரத்யேக நண்பர்கள். இந்த வருஷமும் இங்கே வருவார்களா...?
வருவார்கள் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறேன்
வில்லி பேசுவது எனக்கு விளங்காவிட்டாலும் ரொம்பவும் ரசிக்கும் படியாக இருக்கும்..
கணித சமன்பாடுகளை அவரோடு விவாதிக்கப் பிடிக்கும் எனக்கு
இங்கிலாந்திலேயே இருந்திருக்கலாம் என்ற எண்ணம் உங்களுக்கு வருவது உண்டா?
இல்லை அன்னி... உளவுத் துறையினருக்காக புதிர்களை விடுவிப்பது அலுப்பூட்டும் உத்யோகம்!
கட்டிப்போட்ட மாடு ஒரு வட்டத்துக்குள் மேயும் அனுபவம் அது... ஆனால் இங்கே என் சிந்தனை சுதந்திரமாக சிறகடித்துப் பறக்கும் சுகனுபவம் கிட்டுகிறது!
இந்த வாழ்க்கை எளிமையானது... இஷ்டம் போல் உண்டு, உறங்கி, சுயமான போக்கில் சிந்தனையை ஓடவிட்டுக் கொண்டு, அன்பு மனைவி அருகில் இருக்க - ஒரு மனிதனுக்கு வேறென்ன வேண்டும்?
உங்களுடைய சந்தோஷம்தான் என் சந்தோஷம் அம்ப்ரோஸ்!
இலண்டனில் ஸர் ஜெரால்டு டார்ரண்டின் அலுவலகம்...
புரஸர் அம்ப்ரோஸ் லாம்பெர்டின் பைல்... ஸார்!
தாங்க் யூ... ப்ரேஸர்!


ம்ம்... மூன்றாண்டுகளுக்கு முன் லாப்லாந்து சென்று அங்கே ஒரு இளம் மலை ஜாதிப் பெண்ணை மணந்து கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்...
ஒரு கணித மேதை செய்யக்கூடிய காரியமாகப் படவில்லையே!
அவர் விரும்பியதை செய்ய லாப்லாந்தில் வாய்ப்பு கிடைத்திருந்தால், அவருடைய செய்கையில் அர்த்தம் இருக்கிறது ஸார்!
ஓ... அப்படியானால் அதிர்ஷ்டக்காரர்தான்!
நமக்கு அத்யாவசியமாக தேவைப்படுகிற ஒரு திறமை அவரிடம் இருக்கிறது ப்ரேஸர்... எனவே, அவரை திரும்ப வரவழைக்க வேண்டும்.
மாடஸ்டி ப்ளைஸி ஒரு தடவை அவரை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டிருக்கிறாள் ஸார்.
புரபஸரை திரும்பி வருமாறு நாம் கட்டாயப்படுத்த முடியாது... மாடஸ்டிக்கு அவர் கடன்பட்டிருப்பதால் ஒருவேளை அவள் அவரிடம் நயந்து பேசி வரவழைக்க முடியலாம்!
செய்த உதவிக்கு பிரதிபலனை எதிர்பார்ப்பவள் அல்ல மாடஸ்டி... ஆனாலும் நாம் முயன்று பார்ப்பதில் தவறில்லை
ஒருவேளை அவள் மறுத்தால்...?
சூழ்ச்சி எதையாவது கையாளவேண்டி வரலாம்... சரி... இப்போதை முயற்சியை தொடங்குவோம்!

## அத்தியாயம் 1. சூடான சந்திப்பு!




அவருக்கு தேவைப்படுவது எதுவோ...? ஆனால் நிச்சயம் அது நமக்கு பிடிக்காததாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது.
நீராவிக்குளியல் பகுதி இப்போது நடமாட்டம் இல்லாதிருக்கும்... நிம்மதியாக உரையாடலாம் -வாருங்கள் போவோம்.
ஆனால்... உன்னோடு மட்டும் நான் பேசவரவில்லையே.
என் யூகமும் அதுதான்... அவரை - கொஞ்சம் இழுத்தடிப்போம்!
'டர்க்கிஷ் - பாத்'தில்...
எங்கே அவரைக் காணோம்... மிரண்டு ஓடிப் போய் விட்டாரா?
இங்கே இருபாலரும் சேர்ந்தே 'பாத்' எடுத்துக் கொள்ளலாம் ஸார்!
இல்லை... கிண்டலடிக்கிறோம் என்று முதலில் நினைத்திருக்கிறார்... நிஜம் என்று புரிந்ததும் அவரும் தயாராகிவிட்டார்
நாம் அவருக்கு அத்யாவசிய தேவை போலிருக்கிறது...!
...இல்லையேல், இப்படி இழுத்த இழுப்புக்கெல்லாம் வருவாரா?


வந்து அமருங்கள் ஸர் ஜெரால்டு... உங்களுக்கு போதுமான கதகதப்பு இங்கே கிடைக்கிறதா?
ஓ... ஷ்யூர்... நன்றி... இருபாலரும் சேர்ந்து - புது அனுபவம் எனக்கு...
என்ன விஷயம் பேச வந்தீர்கள்?
சமயோசிதமாக பேச நினைத்து வந்தேன்... ஆனால் இங்கே எண்ணவோட்டம் தறிகெட்டுப் போய்விட்டது.
சுருங்கச் சொன்னால்... உன் நண்பர் அம்ப்ரோஸ் வாப்லாந்திலிருந்து இலண்டனுக்குத் திரும்பி எங்கள் பணி ஒன்றில் ஈடுபட அவரை நீ தூண்டவேண்டும்...!
எங்களுடைய பேச்சுக்கு அவர் கட்டுப்படுவார் என்று எதைவைத்து நீங்கள் தீர்மானித்தீர்கள்?
சில வருடங்களுக்கு முன் ஒருமுறை நீ அவரை மரணத்திலிருந்து மீட்டிருக்கிறாய்... இது ஒன்று போதாதா?
பிரதிபலனை எதிர்பார்ப்பவர்கள் அல்லவே நாங்கள்!
ஆனால் அவர் நன்றி மறக்கும் ரகம் அல்லவே!


இன்னும் சற்று சூடாக இருக்கும் அறைக்குப் போகலாம் வாருங்கள்
இதைவிட சூடாகவா?
அம்ப்ரோஸை திரும்ப அழைத்து வர நீங்கள் சொன்னது இளவரசிக்குப் பிடிக்கவில்லை போலும்...
ஆனால் எனக்கு வேறு வழி இல்லையே!
இங்கே இதமாக இருக்கிறதா?... வந்து அமருங்கள்... அம்ப்ரோஸை நாங்கள் சந்தித்த கதையை சொல்கிறேன் – கேட்க ஆர்வம் இருக்கிறதல்லவா?
ஓ... ஷ்யூர்!
சில வருடங்களுக்கு முன் நானும் வில்லியும் அர்ஜென்டினாவில் ஒரு மட்டமான காஸினோவுக்கு போயிருந்தோம்...
"...அங்கே ரௌலட் மேஜையில் தொடர்ந்து கெலித்துக் கொண்டிருந்த அந்த அப்பாவி மனிதரை சந்தித்தோம்."
அவர் புரபஸர் அம்ப்ரோஸ் லாம்பெர்ட் என்று பின்னர் தெரிந்து கொண்டோம்... சும்மா பொழுது போக்காக அவர் கண்டுபிடித்த ஒரு ரௌலட் ஆட்டமுறை அங்கே நடைமுறையில் பெரும் வெற்றி ஈட்டித் தந்தது அவருக்கு.



ஆட்டம் இத்தோடு முடிகிறது... இனி யாரும் பந்தயம் கட்ட முடியாது!
ஓ... ஐ ஆம் ஸாரி! நான் கண்டு பிடித்த ஆட்டமுறையை சோதித்து அறியவே இங்கே பங்கேற்றேன். இந்தப் பணம் எனக்கு வேண்டாம்!
பணத்தில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார் புரபஸர்...
முறைப்படி வென்றிருக்கிறீர்கள்... நீங்கள் கொண்டு போவது தான் நியாயம்!
லாபம் ஈட்ட அல்ல - நான் கண்டுபிடித்த புது ஆட்டமுறையை சோதிக்கவே ஆடினேன்...!
கிராக்கு மனுஷன்... வேடிக்கையாக இருக்கிறது அவருடைய பேச்சு...
பணத்தோடு பத்திரமாக வீடு போய்ச் சேருவாரா... சந்தேகம் தான்!
அப்பாவி மனிதர்... ஆபத்தில் மாட்டிக் கொள்வார்
நாம் உதவினால்தான் உண்டு
அவருக்கே தெரியாதவாறு பின் தொடர்வோம்!
ஓ.கே.


புரபஸர் தன் ஹோட்டலை சென்றடைந்த போது -
ஸார்... லிப்ட் இயங்கவில்லை... பின் பக்கம் இருக்கிற லிப்ட்டுக்குப் போங்கள்!
நல்லது!
ஆனால் கொல்லைப் புற சந்தில் -
கடவுளே -
எதிரே மூன்று பேர் கையில் கத்தியோடு! பின்னால் ஒருவன்... - ஸர் ஜெரால்டு தூக்கமா?
இல்லை... வெப்பம் சற்று கூடுதலாக இருக்கிறது.
நாங்கள் எதிர்பார்த்தபடியே அவரை ஆபத்து சூழ்ந்து கொண்டுவிட்டது.
அவர் ஜெயித்த எழுபதாயிரம் டாலர்களை பறித்துக் கொண்டு அவரை கொன்றுவிட தயாராக இருந்தனர்.



கணப் பொழுதும் இனி தாமதிக்க முடியாது -
மாடஸ்டியும் வில்லியும் குறுக்கே பாய்ந்தார்கள்.
ஆவ்...
பெண்ணே... ஜாக்கிரதை!
விலகுங்கள் - அவர்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!
மாடஸ்டியின் திறமையைப் பற்றி புரபஸருக்கு தெரிந்திருக்க நியாயமில்லைதான்.
.. என் பின்னால் வந்துவிடு...
நன்றி... அதற்கு அவசியம் இல்லை...!
பயல்களுக்கு தொழிலில் நிபுணத்துவம் காணாது இளவரசி! - சோதாக்கள்!


ஸார்... என் பெயர் -வில்லிகார்வின்... அவள் -மாடஸ்டி பிளைஸி
இனி ரௌலட் ஆடுவதானால் நேர்மையான காஸினோவாக பார்த்து நுழையுங்கள் ஸார்...
இப்படித்தான் எங்களுடைய சந்திப்பு நிகழ்ந்தது ஸர் ஜெரால்டு...
ஓ...
சரி... இப்போது சொல்லுங்கள் -புரபஸர் லாம்பர்ட் எதற்காக உங்களுக்கு தேவைப்படுகிறார்?
அப்பப்பா... என்ன வெப்பம்... மம்... வந்து -
ஒரு புது சங்கேத் குறியை புதிர் அவிழ்க்க வேண்டியிருக்கிறது.
எங்களுடைய நிபுணர்களும், கம்ப்யூட்டர்களும் தோற்றுப் போய்விட்டார்கள்... இந்தத் துறையில் லாம்பெர்ட்டை மிஞ்சிய அறிவாளி யாருமே கிடையாது... எனக்காக... நாட்டுக்காக...
... போய் அவரை அழைத்து வாருங்கள்!
அதில் அவருக்கு என்ன லாபம்?


இதெல்லாம் அலுத்துப் போய்த்தானே அவர் உலகின் ஒரு ஒதுக்குப் புறத்துக்குப் போய் ஒரு அப்பாவிப் பெண்ணை மணந்து கொண்டு எளிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.
ஐன்ஸ்டைனின் கண்டுபிடிப்புக்கு ஈடான புது முயற்சியில் ஈடுபட அங்கே தனிமை கிட்டியிருக்கிறது அவருக்கு... அவருடைய சந்தோஷத்தைக் கெடுக்க நான் தயாரில்லை...
பேரவதற்கு முன் ஜில்லென்று ஒரு குளியல் போடுகிறீர்களா...?
ஏற்கனவே போட்ட மாதிரிதான்! -வருகிறேன்
பின்னர் - டார்ரண்ட்டின் அலுவலகத்தில்
அங்கே என்ன ஸார் நடந்தது?
கூட்டு 'டர்க்கிஷ் - பாத்' துக்கு கூட்டிச் சென்றாள் என்னை... திட்டமிட்ட சதி... எனக்கு முதலில் உறைக்கவில்லை...
எப்படியாவது அவளை என் வழிக்குக் கொண்டு வந்துவிடுவேன் என்று அவளுக்கும் தெரியும்... அதனால்தான் அப்படியொரு சூழ்ச்சி செய்திருக்கிறாள்... அங்கே நிலவிய கதகதப்பும், மற்ற சங்கதிகளும் என்னை கோர்வையாக சிந்திக்கவிடவில்லை.
...கோட்டை விட்டுவிட்டேன்!
இதெல்லாம் சகஜம்தான் ஸார்... மறுபடியும் முயன்று பார்ப்போம்!

## அத்தியாயம் 2. பண்ட மாற்று!




என்ன அது - சற்று விபரமாகத்தான் சொல்லுங்களேன்!
சொன்னால் பிறகு நான் தூக்கில்தான் தொங்க நேரிடும்!
ஒரு சிறு குறிப்பு கூடவா தரக்கூடாது?
வேண்டாம்... என் வாயை கிளறி என்னை இக்கட்டில் மாட்டிவிட்டுவிடாதீர்கள்... வருகிறேன்!
நிறைய ஊற்றி உளறச் செய்திருக்கலாமோ...
அந்த பாச்சாவெல்லாம் ப்ரேஸரிடம் பலிக்காது -சரியான கல்லுளி மங்கன்!
மறுநாள் காலை டார்ரண்ட்டின் ஆபீஸில்....
அந்த இரகசிய திட்டத்தை நான் ஏன் வெளியிட வேண்டும்!
உங்கள் பொருட்டு பலமுறை உயிரையே பணயம் வைத்திருக்கிறாளே!
...அந்த நன்றிக் கடனுக்காக!
விடுங்கள் வில்லி - கொச்சைப் படுத்தாதீர்கள்!
சுருக்கமாக தெளிவு படுத்துவோம்... லாம்பர்ட்டை இங்கே வரவழைக்க நீங்கள் முயன்றால் அதற்கு முட்டுக்கட்டை போடுவதே என் அடுத்த இலட்சியமாக இருக்கும்!
ஓகோ! உண்மை நிலவரம் தெரிந்தால் நீ இப்படி பேசமாட்டாய்!


எங்களிடம் சிறைப்பட்டிருக்கும் ஒரு ரஷ்ய ஏஜெண்டை திரும்பப் பெறுவதில் மாஸ்கோ தீவிரம் காட்டுகிறது... அவனை ஒப்படைத்து புரபஸர் லாம்பெர்ட்டை பண்டமாற்று செய்ய தீர்மானித்திருக்கிறேன்.
பண்டமாற்று?
அவர் ரஷ்யா வசம் இல்லையே -லாப்லாந்தில் அல்லவோ இருக்கிறார்!
அவரையும், அவருடைய மனைவியையும் சிறைப்பிடிக்க உறுதிபூண்டு செயல்பட்டு வருகிறார்கள் ரஷ்யர்கள்!
மனைவியைப் பணயப் பொருளாக்கி தங்களுக்கு அவர் பணி புரிய நிர்ப்பந்திப்பார்கள். மாற்றாக எங்கள் வசம் உள்ள அவர்களுடைய ஏஜெண்ட் திரும்பக் கிடைத்தால் அதுவே நல்ல பேரம் என்று நினைப்பார்கள்.
புரபஸர் லாம்பெர்ட்டை கடத்தப் போகிறார்கள் என்ற செய்திக்கு என்ன ஆதாரம்?
அமெரிக்க உளவு நிறுவனமான C.I.A. மூலம் ஏகப்பட்ட பணம் செலவிட்டேன்!
நம்பகமானவர்கள்... இளவரசி!
தெரியும்...
இதை ஏன் முன்பே எங்களிடம் சொல்லவில்லை? லாம்பெர்ட் எங்கள் நண்பர் என்று உங்களுக்குத் தெரியுமில்லையா?
இப்போதும்கூட சொல்லியிருக்க மாட்டேன்... ஆனால் அந்த இரகசியத்தை வெளியிட வேண்டிய நெருக்கடியை நீதான் உருவாக்கினாய்...


KGB யினர் ஒரு கூலிப்பட்டாளத்தை அங்கே அனுப்பக்கூடும்... எல்லையை ஊடுருவிவிட்டால் போதும் -பிறகு காரியத்தை சாதிப்பது வெகு சுலபம்!
KGB - ரஷ்ய உளவுப் பிரிவு -
அவரை கடத்திச் செல்ல அவர்களை அனுமதித்து விட்டு பிறகு பண்டமாற்று பேரம் பேசதிட்டம் போட்டிருக்கிறீர்கள் -அப்படித்தானே?
அபாண்டமாக பேசாதே! அவர்களுடைய முயற்சியை முறியடிக்க என்னால் ஆகாது! நான் வேறு என்னதான் செய்ய முடியும்?
சரி... இங்கே ஏர்-டைம் டேபிள் கிடைக்குமா - உடனடியாக?
ஹாம்மர் பெஸ்ட் செல்லும் விமானம் ஒன்றில் -
சின்ன விஷயமாகப்படுகிறது...! அம்ப்ரோஸிடம் பேசி அவரை நாடு திரும்பச் சொல்ல வேண்டும் - அவ்வளவுதானே!
KGB யினர் அவரை கடத்திச் செல்வதில் முனைப்பாக இருக்கிறார்களா என்று முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்!
அதுதான் டார்ரண்ட் சொன்னாரே!
ஓகோ... நம்மை வழிக்குக் கொண்டு வரும் சூழ்ச்சியா?
ஏன் அப்படி இருக்கக்கூடாது?

# அத்தியாயம் 3. புலி வந்து விட்டது..!




மாடஸ்டி...! வில்லி...! திடீரென்று உங்களை சந்தித்ததில் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?
ஹலோ அன்னி - நன்றாக இருக்கிறாயா..? உன் இங்கிலீஷ் எவ்வளவோ தேறிவிட்டது!
கிண்டல் பண்ணுகிறாரா? ஏதாவது தப்பாக பேசிவிட்டேனா?
இல்லை நீ நன்றாகவே இங்கிலீஷ் பேசுகிறாய்!
ஆம்ப்ரோஸ்... யார் வந்திருக்கிறார்கள் என்று வந்து பாருங்களேன்!
ஓ... ஹலோ...: மாடஸ்டி! அன்றைக்குநான் இர்கூப்ஸ்தியரி பற்றி விளக்கியது உனக்கு நினைவிருக்கிறதா?
இல்லை - ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டதல்லவா!
ஓ... ஆமாம் - இடையில் முழுதாக ஒரு வருடம் ஓடிவிட்டது. ஆனாலும் நீ அன்று பார்த்த மாதிரியே இருக்கிறாய்!
என் நண்பர் வில்லி கார்வினை நீ இதற்கு முன் சந்தித்திருக்கிறாயா?
விஞ்ஞானிகள் ஞாபக மறதிக்காரர்கள் என்பார்கள். ஆனாலும் இப்படியா? அவரோடுதானே நான் வந்திருக்கிறேன்!


இடம் பெயர்ந்து போய்க் கொண்டிருந்த அந்த ஆதிவாசிகளோடு மாடஸ்டியும், கார்வினும் சேர்ந்து பயணமாயினர்.
KGB யினர் ஒருவேளை உங்களை கடத்திச் செல்ல முயற்சிக்கலாம் என்று அம்ப்ரோஸிடம் சொல்லப் போகிறோமா?
இப்போ வேண்டாம்:..! ஆனால் அன்னியை எச்சரித்த வைப்பது நல்லது!
அதையடுத்து -
அப்படியொரு கடத்தல் முயற்சி நடந்தால் நானும், வில்லியும் தடுத்துவிடுவோம்... -ஆனால் பிறகு நீங்கள் இங்கே இருப்பது நல்லதல்ல... எங்களோடு வந்து விடுவது தான் உசிதம்
புரிகிறது...
சொந்த பூமியை விட்டு வருவது உனக்கு கஷ்டமாக இருக்கலாம்... நல்லதே நடக்கும் என்று தைரியமாக இரு!
இங்கிலாந்தில் ரெயின்டீர் எல்லாம் இருக்காது என்று தெரியும் எனக்கு... இங்கே ஆற்றோரவாசிகள் செய்வதுபோல் நாங்கள் அங்கே மீன்பிடித்து வாழமுடியும் என்று நினைக்கிறேன்
கவலைப்படாதே! தேம்ஸ் நதியில் மீன்களுக்குப் பஞ்சமே கிடையாது!


ஒரு வாரம் கழித்து -
ஆராய்ச்சி எந்த மட்டில் இருக்கிறது அம்ப்ரோஸ்
நன்றாக போய்க் கொண்டிருக்கிறது
ஐன்ஸ்டைன் சொன்னமாதிரி E = MC² ல் தீர்வு காண முடிகிறதா?
முயன்று கொண்டிருக்கிறேன்!
அரைமைல் தொலைவில் -
இன்றிரவேவா?
ஆமாம்...! ஓநாய்கள் ரெடி.... வேலை சுலபமாக முடிந்துவிடக் கூடும்!
அம்ப்ரோஸும், அன்னியும் தங்கியிருந்த கூடாரத்தை மாடஸ்டியும், வில்லியும் முறை வைத்து கண்காணித்து வந்தனர்
ஏதோ அசம்பாவிதம் -இளவரசி!
நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விபரீதம் அல்ல என்று தோன்றுகிறது... மந்தையிலிருந்து யாரோ கூவும் சப்தம் வந்தது...


அந்த விடிகாலைப் பொழுதில் ஓர் இடையன் உரக்க குரல் எழுப்பிக் கொண்டிருந்தான்...
அஸ்லக்... என்ன சலசலப்பு இங்கே?
மந்தையினூடே ஓநாய்கள் புகுந்துவிட்டன... விரட்டியாக வேண்டும்!
உதவிக்கு நாங்களும் வருகிறோம்
எதிர்பார்த்த விபரீதம் இல்லை இளவரசி - ஓநாய்கள்தான் வந்திருக்கின்றன!
ஓநாய்கள் என்றால்? - நிஜ விலங்குகள் தானே!
ஹைய்ய்... ய்ய - ஆஆ!
ஓநாய்கள் மனிதர்களை தாக்குவது கிடையாதாம் - அஸ்லக் சொல்கிறான்!
இரண்டே ஓநாய்கள்...! அதிசயம்தான்...! எப்போதுமே ஓநாய்கள் கூட்டமாகத்தான் திரியும்!
வில்லி... எனக்கு ஒரு சந்தேகம்!



வேண்டும் என்றே ஓநாய்களை அனுப்பி நம் கவனத்தை திசை திருப்பும் முயற்சியோ?
முகாமுக்கு மறு பக்கமிருந்து எஞ்சின் ஒன்று உறுமும் ஒலிமெலிதாக வருவது கேட்டது...
மோட்டார் ஸ்லெட்ஜ் மாதிரி தோன்றுகிறது!
கோட்டை விட்டுவிட்டோம்!
அம்ப்ரோஸையும், அன்னியும் எதிரிகள் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்பது நிச்சயம்!
இங்கே என்ன நடந்தது என்று யாராவது பார்த்தீர்களா?
இன்கா சொல்கிறான் -நாம் ஓநாயை விரட்டச் சென்றிருந்த வேளையில் இங்கே இருநபர்கள் வந்தார்களாம்.
கையில்-துப்பாக்கி இருந்ததாம்... அம்ப்ரோஸையும், அன்னியையும் மோட்டார் ஸ்லெட்ஜில் ஏற்றிச் சென்று விட்டார்களாம்
தேவையான சாமான்களை அள்ளிப் போடுங்கள் வில்லி... அவர்கள் சென்ற தடம் தெளிவாக இருக்கும்



மோட்டார் ஸ்லெட்ஜ் உங்களைவிட வேகமாக போகுமே....
ஆனால் நாளை ஓய்வெடுக்க எங்கேயாவது தங்குவார்களல்லவா?
கீழ்த்திசையில் போகிறார்கள்... எனவே, சுடி கணவாய் வழியாகத்தான் போவார்கள். முன் போல் உங்கள் வசம் ஸ்வீடிஷ் பனிச்சறுக்கு கட்டைகள் உள்ளனவா?
இருக்கின்றன - எதற்காக கேட்கிறாய்?
எங்கள் கட்டைகள் வேகமாக போக உதவாது... ஸ்வீடிஷ் கட்டைகள் எனில் நீங்கள் அந்த குறுகிய கணவாயை பாய்ந்து தாண்டிவிடலாம்... பயணத் தொலைவு பல மைல் குறுகிவிடும்!
பனியில் வரைபடம் போட்டான் அஸ்லக்.
அம்ப்ரோஸையும், அன்னியையும் எதிரிகள் நாடு கடத்திச் செல்ல நினைத்தால் இந்த மலைப்பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும்
நீங்கள் சுடி கணவாயை பாய்ந்து தாண்டினால் இங்கே நதியோரம் வந்து சேருவீர்கள். மலைப்பகுதியிருந்து நிக்கி வளைவு வரை பனி உறைந்தே கிடக்கும்
சுமார் முப்பது மைல் பனிப்பரப்பு... கைவசம் ஸ்கேட்டிங் உருளை இருக்கிறது... இரண்டே மணி நேரத்தில் ஒரு முழுநாள் பயணத் தொலைவை கடந்துவிட முடியும்!


அதையடுத்து மோட்டார் ஸ்லெட்ஜின் தடத்தில் மாடஸ்டியும் வில்லியும் விரைந்தார்கள்
கைவசம் எவ்வளவு டீசல்தான் வைத்திருக்கிறார்களோ!
அனைத்தையும் முன் கூட்டியே திட்டமிட்டிருக்கக்கூடும்
அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் அவர்களை நாம் எட்டிப் பிடிக்கத் தவறினால், வடதிசையில் சென்று சுடி கணவாயை பாய்ந்து தாண்டவேண்டி வரலாம்!
அவர்களை வழி மறிக்க வகை பிறக்கலாம்!
ஆனால் அப்படி பாய்வது படு ஆபத்தான காரியம்!.
கொஞ்சம் அதிர்ஷ்டம் மட்டும் இருந்தால் அவர்களை நாம் பிடித்துவிடலாம் என்று தோன்றுகிறது...
அதிர்ஷ்டம் தேவைதான்... அது நமக்கு துணை புரியாவிட்டால் பாயும் முயற்சி பித்துக்குளித்தனமான தாகிவிடும்!
KGB குழுவினர் அம்ப்ரோஸை கவர இப்படியொரு சூழ்ச்சியை கையாளுவார்கள் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை...
என்னைத் தேற்ற முயற்சிக்க வேண்டாம் வில்லி!
கவனத்தை திசை திருப்பும் அந்தச் சூழ்ச்சி ஏன் என்று எண்ணிப்பார்... நாம் அங்கே விழிப்போடு இருந்தது அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.
ஓ... ஆமாம்...! அப்படியானால் புதிதாக சில வினாக்கள் எழுகின்றன...!


மேலும் இரண்டு மணி நேரம் பயணம் செய்த பின் -
அதோ.. ஒரு குடிசை
தடம் நேராக அங்கேதான் போகிறது... ஆனால் மோட்டார் ஸ்லெட்ஜ் அங்கே இருப்பதாக தெரியவில்லை.
டீஸலை நிரப்பிக் கொண்டு கிளம்பிப் போயிருக்கலாம்!
என்ன செய்யலாம்? குடிசையின் உள்ளே இருந்தால் நாம் வருவதை கண்டு கொள்வார்கள்... வெகு சுலபமாக நம்மை வேட்டையாடி விடுவார்கள்
வேறுவழியில்லை வில்லி... நான் நெருங்கிப் போகிறேன் எனக்கு பாதுகாப்பு கொடுங்கள்
கதவு திறந்து கொண்டால் சட்டென்று குனிந்து பதுங்கு இளவரசி!
மோட்டர் ஸ்லெட்ஜின் தடம் குடிசையைத் தாண்டி போகிறது.... அவர்கள் தங்கவில்லை போலும்... எதற்கும் உள்ளே நுழைந்து நோட்டம் விடுகிறேன்
வில்லி! முதலுதவிப் பெட்டியோடு ஓடி வாருங்கள்!
அஹ்... நீ... நீங்கள் - மாடஸ்டி பிளைஸிதானே!


ஒருவன் செத்துக்கிடந்தான். மற்றவனுக்கு பலத்த காயம்
என்னதான் நடந்தது?
மேலிடத்து உத்தரவின்படி புரபஸர் லாம்பெர்ட்டையும் அவருடைய மனைவியையும் கடத்திக்கொண்டு வந்தோம்
எங்கள் துரதிர்ஷ்டம் ஒரு KGB குழு இங்கே இருந்திருக்கிறது. நேராக அவர்கள் கையில் வந்து விழுந்தோம்... எரிக்கை கொன்று விட்டார்கள்.
அப்படியானால் KGB குழுவினர் இல்லையா நீங்கள்?
இல்லை...! என் பெயர் அக்ஸெல் ஜான்ஸன்... ஸ்வீடிஷ் உளவுத்துறை ஏஜெண்ட்... லாம்பார்ட்டையும் அவருடைய மனைவியையும் கடத்தி வந்து பிறகு தப்பிச் செல்ல அனுமதித்து விடவேண்டும் என்பது உத்தரவு...
இந்த அநியாயம் எப்போது நடந்தது?
சுமார் 2 மணி நேரத்திற்கு முன்பு!
தோட்டா ஊருடுவிப் போயிருக்கிறது... மருந்திட்டு உன் காயத்திற்கு கட்டுப் போடுகிறோம் - படுத்துக் கொள்...
...சில குழப்பமான கேள்விகளுக்கு நீ விளக்கம் தரக்கூடும்
இந்த துரதிர்ஷ்ட சாலியை அடக்கம் செய்யும் கடமையும் நமக்கு இருக்கிறது இளவரசி



லாம்பெர்ட்டை கடத்தி வந்து பிறகு தப்பிச் செல்ல விடுவது என்ற திட்டத்தை ஸ்வீடிஷ் உளவுத்துறை வகுத்தது ஏன்?
பிரிட்டிஷ் உளவுத் துறையினரின் வேண்டுகோள் அப்படி!
டார்ரண்ட்டின் சாணக்கியம் புரிகிறதா இளவரசி?
புரபஸர் லாம்பெர்ட்டை நாம் அழைத்து வர மறுத்ததும் - KGB யினர் அவரைக் கடத்தப் போவதாகக் கட்டுக்கதை விட்டிருக்கிறார். அதைக் கேட்ட பிறகு நாம் புரபஸரைக் காப்பாற்ற இங்கே ஓடி வருவோம் என்பது அவருக்குத் தெரியும்!
ஆனால் நிஜமாகவே புரபஸர் லாம்பெர்ட்டை KGB குறி வைக்க நேர்ந்தது அதிசயமான ஒற்றுமை தான்!
KGB குழு அவர்களை கடத்திச் செல்ல முயற்சிப்பதாக நம்மிடம் ரீல் விட்ட டார்ரண்ட் ஸ்வீடிஷ் உளவுத் துறையினரின் உதவியோடு ஒரு போலி கடத்தல் நாடகத்தை அரங்கேற்றத் திட்டமிட்டிருக்கிறார்
நாம் அம்ப்ரோஸை நாடு திரும்புமாறு தூண்ட நம்க்கு ஒரு நெருக்கடியை உருவாக்குவதே அந்த நாடகத்தின் நோக்கம் !
சும்மாவேணும் புலி வருகிறது என்றார் டார்ரண்ட் - ஆனால் நிஜமாகவே புலி வந்துவிட்டது!
ஆமாம்... அவர்கள் மொத்தம் மூன்று பேர்... அம்ப்ரோஸின் இருப்பிடம் தெரியாமல் அலைந்து கொண்டிருந்திருக்கிறார்கள். நாங்கள் வலிய அவர்கள் கையில் போய் விழுந்ததுதான் துரதிர்ஷ்டம்!


உன் நண்பனை புதைத்துவிட்டேன்...!
நன்றி!
அக்ஸெல்...! அந்த மூவரில் நானோ வில்லியோ அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடிய நபர் யாரேனும் உண்டா?
இதற்காகவே அமர்த்தப்பட்ட வெளிநாட்டு கூலிப்படை ஆசாமிகள் அவர்கள் ....
இருவர் நான் முன்பின் அறியாதவர்கள்... மூன்றாவது ஆசாமி கௌட்ஸ் என்று பெயர்... கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
ம்ம்... என்னை தன் கையாலேயே கொல்வதாக ஒருமுறை சபதம் பூண்டிருக்கிறான் இந்த கௌட்ஸ்
அவன் அப்படி சபதம் எடுக்க காரணம் என்ன,மிஸ் பிளைஸி?
அவன் ஒரு பயங்கரக் க்ரிமினல்:.. சுடுவதில் வல்லவன் - பணம் கிடைக்குமேயானால் சொந்த தாயையும் கொலை செய்யத் தயங்கமாட்டான்
நெடுங்காலத்திற்கு முன் நாங்கள் வேரறுத்த ஒரு சமூக விரோத கும்பலில் அவன் ஒரு கூட்டாளி...
உண்டு முடித்தபின் நாங்கள் அவனை துரத்திச் செல்லப் போகிறோம்!
ஆனால் இங்கே திரும்பி வருவோம் அக்ஸெல்
அந்த சிரமம் உங்களுக்கு வேண்டாம்... நான் கெடுப்படி அறிக்கை அனுப்ப தவறினால் போதும் ஸ்வீடிஷ் உளவுத்துறையினர் இந்தக் குடிசையை சோதிக்க வந்து சேர்ந்து விடுவார்கள்.


அந்தக் கும்பல் உங்களுடைய மோட்டார் ஸலெட்ஜை கொண்டு போய்விட்டதா?
ஆமாம்! நானும் செத்துவிட்டதாக நம்பிவிட்டார்கள். அவர்கள் பேச்சிலிருந்து நாளை காலை எட்டு மணிக்கு ஒரு ஹெலிகாப்டர் அவர்களுக்கு உதவ வந்து சேரும் என்று தெரிய வந்தது.
இடம் எது என்று தெரியுமா?
என் பையிலுள்ள வரைபடத்தை எடுத்து விரியுங்கள். இடத்தை காட்டுகிறேன்.
எந்த இடம்?
டயர்மெஸ் என்று மழைக் கடவுளாக அந்நாளில் லாப் இன மக்கள் வழிபட்டு வந்த கல்தூண் இருக்குமிடம்!
இரண்டே நாளில் திரும்பி வந்துவிடுவோம் அக்ஸெல் - அதுவரை உனக்குத் தேவையான உணவு எங்களுடைய புல்க்காவில் இருக்கிறது
ஏன்... அதை நீங்கள் கொண்டு செல்லவில்லையா?
- இல்லை... கொள்ளையை ஹெலிகாப்டர் வந்து மீட்டுச் செல்லுமுன் பிடிக்க வேண்டுமானால் நாங்கள் சுடி கணவாயை பாய்ந்து தாண்ட வேண்டும். எனவே, சுமை எதையும் எடுத்துப் போகவில்லை.
அப்படி குறுக்கு வழியில் போவதானால் நிறைய அவகாசம் இருக்கிறது உங்களுக்கு... இரண்டு மணி நேரம் தூங்கி ஓய்வெடுத்துப் போகலாமே!
தாமதித்தால் காரியம் கெட்டுப் போகலாம்!



மாடஸ்டியும் வில்லியும் கிளம்பினர்
பாதை மேடாக இருக்கிறதே!
இந்த ஒரு மேடுதானாம்... பிறகு போகப் போக இறக்கம்தான் என்று அக்ஸெல் சொன்னான்
ஒரு மணி நேரம் கழித்து -
இந்தச் சரிவின் முடிவில்தான் சுடி கணவாய் இருக்கிறது. நெருங்கிப் போய் பார்ப்போம் வாருங்கள்
எதிர் முனை சற்று தாழ்வாக இருப்பது சாதகமான அம்சம்
மேட்டிலிருந்து வேகம் பிடித்து வந்து தாண்டினால் சாதித்து விடலாம்!
குறைவான பளுவோடு நாம் குதிப்பது நல்லதல்லவா?
சந்தேமில்லாமல்!
சாமான்களை முதலில் எறிந்து விடுவோம் -அப்புறமாக சேகரித்துக் கொள்ளலாம்!
கட்டைகள் மட்டும் போதும்!


இடைவெளி 40 மீட்டர் இருக்கும்! ஆனால் நாம் இதைவிட கூடுதல் இடைவெளிகளை தாண்டியிருக்கிறோ மில்லையா?
150 மீட்டர் தூரம் தாண்டும் சாம்பியன்களும் இருக்கிறார்கள்
சகல வசதிகளும் இருந்தால் அது சாத்தியமே... ஆனால் இங்கே?
இந்த இடைவெளிக்கு, இருக்கிற வசதியே போதும்!
ம்ம்... கிளம்புவோமா! 60 மைல் வேகம் பெற்று விடவேண்டும் -தாண்டுவதற்குள்!
யார் முதலில் - நானா...? நீங்களா...? - இல்லை சேர்ந்தா?
சேர்ந்தே போவோம்!
ஓ.கே... கிளம்புங்கள்!
மேட்டிலிருந்து சறுக்கி வேகம் பெற்றார்கள்.



முனையிலிருந்து வெளியேறி காற்றில் பறந்தார்கள்
....விஷ்ஷ்.
பத்திரமாக தரையிறங்க வேண்டுமே...
மறு முனையில் -
சர்ர்ர்ரத்!
ஊய்ய்... ய்!
வில்லி...!
டொம்!
தடுமாறி விழுந்துவிட்டேன்!
அடி ஏதும் படவில்லையே?
காதுக்குள் பனி நுழைந்து விட்டதை தவிர வேறொன்றும் இல்லை...! தாண்டிவிட முடியுமா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது இளவரசி!



அதை அப்போதே சொல்வதற்கு என்ன?
அதுதான் தாண்டிவிட்டோமே -விடு!
என்னைப் பற்றிய கவலை -அதனால்தான் விழுந்து காலை ஒடித்துக் கொள்ளவிருந்தீர்கள் -இல்லையா?
நீ ஒரு பெண் என்பதை மறந்துவிடவேண்டும் என்பது சில வேளைகளில் மறந்து விடுகிறது இளவரசி!
மற்ற வேளைகளிலானால் சரி... கடும் பிரயுத்தனங்களின்போது அது ஆபத்தாகிவிடலாம்
வாருங்கள் சாமான்களை சேகரித்து கொண்டு பயணத்தை தொடரலாம்.
நேரத்தோடு போட்டி போட்டுக் கொண்டு விரைந்தார்கள்
ஹெலிகாப்டர் வந்து இறங்க இன்னும் நான்கு மணி நேரம் இருக்கிறது!
போதிய அவகாசம் இருக்கிறது வில்லி... ஆறு உறைந்து கிடந்தால் ஒரு மணி நேரம் முன்னதாகவே அங்கே போய் சேர்ந்து விடலாம்
கௌட்ஸ் கும்பலோடு எப்படி மோதுவது என்று ஏதாவது யோசனை இருக்கிறதா?
சொல்கிறேன்...!



ஆற்று வழியாக ஸ்கேட்டிங் செய்தார்கள்
கௌட்ஸ் உன்னைக் கண்டதும் கொல்ல முயற்சிப்பான். நான் தந்திரமாக ஏதாவது அதிரடி தாக்குதல் நடத்தினால்தான் உண்டு.
அம்ப்ரோஸையும், அன்னியையும் விடுவிப்பது மட்டுமே நம் நோக்கமாக செயல்படுவோம்... கௌட்ஸ் தடுத்தால் அப்பவும் அவனுடைய விதிப்படி நடக்கும்!
ஏன் நாம் எதிரிகளை வீழ்த்துவதை முதல் குறிக்கோளாக வைத்துக் கொள்ளக் கூடாது?
நம் வழிமுறை குறுக்கு வழியில் குறைந்த சேதத்துடன் இலட்சியத்தை எட்டிப்பிடிப்பது அல்லவா!
முடிவில் -
வரைபடம் சரியாக இருக்குமேயானால் அந்த வெட்டவெளி இங்கிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கும்
பத்து நிமிடங்களுக்குப் பின் -
அக்ஸெல் சொன்ன கல்தூண் அதோ -ஹெலிகாப்டர் பைலட்டுக்கு இடம் தெரிய சிவப்பு துணியை கட்டிவிட்டிருக்கிறார்கள்
அருகேயுள்ள குடிசையினுள் அனைவரும் இருக்கக்கூடும்.
நாம் வந்திருப்பது எதிரிகளுக்குத் தெரிந்தால் மறுகணம் நம் தோழர்கள் கொல்லப்படுவது உறுதி!


மூன்று முரடர்களுக்கு மத்தியில் அம்ப்ரோஸும், அன்னியும் இருக்கையில் நேரடி மோதல் விபரீத விளைவையே தரும்....
துப்பாக்கியை எடுத்து நம் நண்பர்களின் நெஞ்சை குறிவைக்க அவர்களுக்கு அவகாசம் கிடைத்தால் அது போதுமே - நாம் தோற்றுவிடுவோம்!
கௌட்ஸுக்கு என்னை தன் கையாலேயே கொல்ல வேண்டும் என்றொரு வெறி... அதையே மூலதனமாக்கிக் கொண்டு விடுவோம்!
நன்றாக ஆலோசனை பண்ணிவிட்டுத்தான் சொல்கிறாயா?
உள்ளே -
நம் நண்பர்கள் வந்து நம்மை மீட்பார்கள் என்று நம்புகிறீர்களா... டியர்?
காலமும் - தூரமும் கணக்குப் போட்டுப் பார்த்தேன் - கணித முறைப்படி சாத்தியமே இல்லை என்றாகிறது...
ஆனால் மாடஸ்டியும், வில்லியும் அசாத்திய சாதனையாளர்கள்... எனவே, என் கணக்கு செல்லுபடியாகாது!
யாரென்று சொன்னாய்?


எங்களுடைய நண்பர்கள் மாடஸ்டி பிளைஸியும், வில்லி கார்வினும்
பிளைஸி...?
நடக்கிற காரியமா...? ஓ.... அப்படி ஒருவேளை அவள் இங்கே வந்து சேர்ந்தால் அவளுடைய எலும்பு ஒவ்வொன்றாக முறியும் சங்கீதத்தை கேட்கும் பேறு உங்களுக்கு கிடைக்கும் புரபஸர்!
ஹெலிகாப்டரை இடம் மாறி இறங்கச் செய்தோமேயானால் நமக்கு பலவிதத்தில் சாதகமாக இருக்கும் இளவரசி
நாம் வந்த வழியில் ஒரு மைல் தொலைவில் ஒரு வெட்டவெளி இருந்தது...
நமக்கு இப்போது தேவை ஒரு சிவப்புத் துணி...! என்னுடைய ஜீன்ஸ்கூட சிவப்புத்தான்!
அது போதும்!
எதிரிகளின் இருப்பிடத்திலிருந்து ஒரு மைல் தொலைவில்
ஹெலிகாப்டர் இந்த வழியாகத்தான் போகும்... எனவே பைலட் முதலில் நாம் காட்டும் அடையாளத்தைத்தான் காண்பான்
இந்தாருங்கள் வில்லி.
ஹெலிகாப்டர் தவறான இடத்தில் இறங்கியிருப்பதை கேள்விப் பட்டவுடன் கௌட்ஸ் இங்கே ஓடோடி வருவான்
நாம் குறிவைக்க தோதாக வெட்டவெளியில் வந்து நிற்பான்


அவர்கள் இங்கே வரும்போது அம்ப்ரோஸையும், அன்னியையும் அவர்கள் சுட அவகாசம் தராமல் அதிரடியாக தாக்கி அம்மூவரையும் வீழ்த்திவிட முடியுமா இளவரசி?
இருக்கிறதோ ஒரே ஒரு ரைபிள் -சாத்தியமேயில்லை! மூவரையும் கச்சிதமாக குறிவைத்து அடுத்தடுத்து நொடிப்பொழுதில் கொல்லவேண்டும்... முடிகிற காரியமா?
நம்மில் ஒருவர் பலி ஆடாகி புலியை ஈர்க்க வேண்டும் -அடுத்தவருக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிற மாதிரி!
உன்னை கொல்ல வெறிபிடித்து அலைகிறான். எனவே, நீதான் ஆடு! அப்படித்தானே!
குடிசையில் -
வெளியே கவனமாக இரு ஜெல்கோ - யாரேனும் வந்துவிடக்கூடும்!
அம்ப்ரோஸ் எதற்காக மாடஸ்டி பற்றி உளறிவைத்தீர்கள் -பாவிகள் உஷாராகிவிட்டார்களே
கவலைப்படாதே அன்னி -அவளுக்கு இவர்கள் ஈடாகமாட்டார்கள்!
சண்டாளர்கள் துப்பாக்கியும், ஆயுதங்களும் நிறைய வைத்துக் கொண்டிருக்கிறார்களே!



வில்லி... ஹெலிகாப்டர் வரும் ஓசை கேட்கிறது
யெஸ்
வந்து சேர்ந்த ஹெலிகாப்டர் ஒரு நபர் வெட்டவெளியில் நின்று சிவப்புத்துணியை ஆட்டும் சமிக்ஞையை கவனித்துவிட்டு கீழிறங்கத் தொடங்கியது...
எங்கள் யுக்தி பலித்துவிட்டது!
அங்கே – ஒரு மைல் தொலைவில்...
கௌட்ஸ்! ஹெலிகாப்டர் சப்தம் கேட்டது... தவறான இடத்தில் தரையிறங்கிவிட்ட மாதிரி தெரிகிறது!
அருகில்தான் எங்கேயோ இறங்கியிருக்கக்கூடும்
அந்த பைலட் அடிமுட்டாளாக இருப்பான் போலிருக்கிறது. ஏற்பாட்டின்படி சிவப்புத் துணி அடையாளம் இங்கே இருக்க எங்கே போய்த் தொலைந்தான் ?
கிளம்புங்கள்... போவோம்! – அவ்விருவரையும் துப்பாக்கி குறிவைத்துக் கொண்டேயிருக்கட்டும்... விவகாரம் சிக்கலாகி வருகிறதாக உணருகிறேன்...
அங்கே –
பைலட் மட்டும்தான் தனித்திருக்கிறான்... கௌட்ஸை அவன் முன்பின் பார்த்திருப்பானா?


கதவை திறந்த பைலட் ரஷ்ய மொழியில் வில்லியை அழைத்தான்...
என்ன சொல்கிறான் என்று விளங்கவில்லை... ஆனால் பயலுக்கு சந்தேகம் வந்துவிட்ட மாதிரி தெரிகிறது
வினாடிக்கு வினாடி அவனுடைய சந்தேகம் வலுக்கிறது
கீழேயிருந்து ஒரேயடியாக காங்கோவினால் அவனை அடித்தாள் மாடஸ்டி...
வாரி அவனை வெளியே இழுத்துப் போட்டாள்
இவனை மறைவிடத்தில் கட்டிப்போட்டு ஓரம் கட்ட வேண்டும் வில்லி... நமக்கு அவகாசம் ரொம்ப கொஞ்சம்
அவகாசம் மட்டுமில்லை இளவரசி... வெற்றி வாய்ப்பும் கூட நமக்கு கொஞ்சம்தான்...
கௌட்ஸ் கும்பல் கானகத்தினூடே விரைந்து வந்தது
எது நகர்ந்தாலும் சுட்டுவிடுங்கள்



...அதுதான் அதிக ஆபத்தில்லாத வழிமுறையாக இருக்கும்!
உண்மைதான்!
வழியிலேயே கௌட்டை நீங்கள் தீர்த்துக்கட்ட முடிந்து - அந்த முயற்சியில் அம்ப்ரோஸுக்கும் அன்னிக்கும் தீங்கு ஏதும் நேர்ந்து விடாமல் வெற்றி ஈட்ட முடிந்தால்...
ஒருவேளை எனக்கு வாய்ப்பு கிடைக்காவிட்டால்?
என்னைக் கொல்லும் வெறி கௌட்டுக்கு இருப்பதை அடிப்படையாக வைத்து அவனை ஏமாற்றி வெட்டவெளிக்கு இழுத்து காரியத்தை முடிப்போம்!
தாக்குவதற்கு ஒரு வாய்ப்பை நாடி மறைவில் காத்துக் கிடந்தார் வில்லி கார்வின்
ஊஹும்... கத்திகளை கச்சிதமாக குறிவைத்து வீச ஒரு வாய்ப்பே கிட்டவில்லை...
...துப்பாக்கியால் சுட்டேன் என்றால் முதல் தோட்டா வெளியான அக்கணமே அன்னியை கொன்றுவிடுவார்கள்.
சிவப்புத்துணி அடையாளம் இல்லாத இடத்தில்-ஏன் இறங்கினான்?
வேறு யாராவது சிவப்புத் துணியை காட்டியிருக்கலாம்!


கௌட்ஸ் கும்பல் வெட்டவெளிக்குள் பிரவேசித்தது
அதோ நிற்கிறது ஹெலிகாப்டர்
ம்ம்...
அருகே - மாடஸ்டி...! ஓ...காட்!
அவளை சுட்டு வீழ்த்தட்டுமா?
சுட்டாயானால் உன்னைக் கொன்றுவிடுவேன் -அவளை நான்தான் கொல்ல வேண்டும்!
அம்ப்ரோஸ் இங்கே என்னதான் நடக்கிறது?
மாடஸ்டி ஹெலிகாப்டரை முடக்கிப் போட்டிருப்பாள் போலிருக்கிறது?
... அதனால் எதிரிகளுக்கு நிலைமை ரொம்ப பாதகமா கிவிட்டது!
அவளிடம் துப்பாக்கி இல்லை... நான் அவளை நோக்கிப் போகிறேன்... லாம்பர்ட்டின் மனைவி துப்பாக்கி முனையில் வைத்திரு ஜெல்கோ
ஓ.கே.!


கௌட்ஸ் அங்கேயே நில்! -ஹெலிகாப்டரினுள் இருக்கும் வில்லி கார்வினின் துப்பாக்கி உன் நெஞ்சை குறி வைத்த நிலையில் இருக்கிறது!
மாடஸ்டி ஆடிய சூழ்ச்சி நாடகத்தை கேட்டவாறு புதர் மறைவில் பதுங்கிக் கிடந்தார் வில்லி.
அவளுடைய புளுகை அவர்கள் நம்பாது போனால் கெட்டது காரியம்!
கார்வின் கவனமாக கேட்டுக் கொள்... என்னை நீ சுட்டால் அக்கணமே பிளைஸியும் உன் மற்ற இருநண்பர்களும் பிணமாகிப் போவார்கள் -ஜாக்கிரதை!
ரைபிளை கீழே எறிந்துவிட்டு கைகளை உயர்த்தியவாறு கீழே இறங்கி வந்து நிற்குமாறு கார்வினிடம் சொல்!
இல்லையேல் லாம்பெர்ட் ன் மனைவியை சுட்டுக் கொல்வோம்
வில்லி உன்னை சுட தயாராக இருக்கும்போது உன் இந்த பூச்சாண்டி வேலை அர்த்தமற்றது கௌட்ஸ்...! முட்டுக்கட்டை நிலைமை - புரிந்து கொள்!
என் கழுத்தில் கைவைக்கத் துடிக்கும் வெறி அவனுக்கு


முன்பு ஒரு முறை நீ குறுக்கிட்டு எனக்கு மில்லியன் டாலர் இழப்பு ஏற்படுத்தியது நினைவிருக்கிறதா... என்றாவது ஒருநாள் இந்தக் கைகளால் உன்னை கொல்வேன் என்று சபதம் எடுத்தேன்...
அவனை மேலும் வெறிகொள்ளச் செய்ய திமிரான வார்த்தைகளை உதிர்த்தாள் மாடஸ்டி...
சும்மா தமாஷுக்கு சொன்னாய் என்றல்லவா நினைத்தேன்... என் கால் தூசுக்கு சமானம் நீ!
தரமில்லாத எதிரிகளை வீழ்த்தி எப்படியோ பெயர் பெற்று விட்டாய் - என்னிடம் உன் பாச்சா பலிக்காது!
முட்டுக்கட்டை நீங்க இதுதான் வழி - நம்மில் வெற்றி பெறுகிறவரின் இஷ்டப்படி மற்றதெல்லாம் நடக்கும்
ஓகே... உன் ஆட்களிடம் இதைச் சொல்... நான் வில்லியிடம் சொல்கிறேன்...
காலியாக கிடந்த ஹெலிகாப்டர் பக்கம் திரும்பி கூவினாள் மாடஸ்டி
வில்லி! நான் கௌட்ஸோடு மோதப் போகிறேன்... குறுக்கே வராதீர்கள்... இவனுடைய அடியாட்கள் ஏதும் விஷமம் பண்ணாமல் பார்த்துக் கொள்ளுங்கள் போதும்



மாடஸ்டியால் தாக்குப்பிடிக்க முடியாது - அந்த கிராதகன் அவளை கொன்றுவிடுவான்!
அவளை கொல்வது அவ்வளவு சுலபமல்ல என்று வில்லி சொல்லியிருக்கிறார்!
கெளட்ஸ்...! ஒருவேளை அவள் ஜெயிக்கிற மாதிரி இருந்தால் -
அலட்டிக் கொள்ளாதே... அப்படியொரு நிலைமை வராது!
ஹெலிகாப்டரிலிருந்து கார்வின் முந்திக்கொண்டு சுட்டுவிடாமலிருக்க லாம்பர்ட்டை குறிவைத்து துப்பாக்கியை பிடித்திரு
சூழ்ச்சி பலித்துவிட்டது... நான் ஹெலிகாப்டரில் இருப்பதாக நம்பிவிட்டார்கள் மூடர்கள்
என் ஆட்கள் ஒதுங்கியே இருப்பார்கள்... கார்வினும் குறுக்கே புகக்கூடாது... சரிதானா?
அவர்களிடையேதான் முட்டுக்கட்டை நிலைமை இருக்கிறதே!
உயிர்வாழ உனக்கு இறுதி வாய்ப்பு தருகிறேன் கௌட்ஸ்-புரபஸரை கடத்திச் செல்ல உனக்கு தரப்படவிருக்கும் தொகையைப் போல் இருமடங்கு நான் தருகிறேன்...
என்னை விலைக்கு வாங்கப் பார்க்கிறாய்?!


கௌட்ஸ் திடீரென்று தாக்கத் தொடங்கிய போதிலும் செயல் வேகம் மிக்க மாடஸ்டி சரேலென்று விலகி பதிலடி கொடுத்தாள்.
சத்!
இந்த ஆர்ப்பாட்டம் எல்லாம் என்னிடம் செல்லாது பெண்ணே
உடம்பா... இல்லை உலோகச் சிலையா?
கௌட்ஸிடம் இரண்டு நிமிடத்திற்கு மேல் அவளால் தாக்குப் பிடிக்க முடியாது!
மாடஸ்டியை இறுகப் பற்றினான் கௌட்ஸ்... ஆனால் அவனை வாரிவிட்டு நிலை குலையச் செய்தாள் மாடஸ்டி....
பொத்தென்று தரையில் வீழ்ந்தான் கௌட்ஸ்
சமர்த்துத்தான்! ஆனால் நீ ஒரு சிறு பிழை செய்தாலும் போதும் உன் கதையை முடித்து விடுவேன்
ஹெலிகாப்டரில் இருப்பதாக நம்பப்பட்ட கார்வின் சண்டையில் கவனமாக இருந்த அடியாட்கள் இருவரின் பின்னால் நைஸாக நெருங்கினார்.



ஓ... அம்ப்ரோஸ்... அங்கே பாருங்கள்
வில்லி எதிரிகளை நெருங்கிய போது கௌட்ஸ் தன்னருகிலேயே இருக்குமாறு பார்த்துக் கொண்டாள் மாடஸ்டி !
அஹ்ஹ... உன் இடுப்பு எலும்புகள் நொறுங்கும் இன்னிசையை நீ இப்போது கேட்டு ரசிக்கப் போகிறாய்...
உச்சகட்டம்... ஸண்டார், ஜெல்கோ இருவரும் இமைக்காமல் சண்டையை ரசித்துக் கொண்டு நின்றிருந்தனர்.
அகப்பட்டுக் கொண்டுவிட்டாள் - அவள் கதை முடியப் போகிறது...
ணங்
அதிரடியாக எதிரிகளை தாக்கினார் வில்லி...
முடித்து விட்டேன் இளவரசி -அவனை நீ தீர்த்துக்கட்டு!
தன் கொண்டையினுள் ஒளித்து வைத்திருந்த காங்கோவை எடுத்து கௌட்ஸை மரண அடி அடித்தாள்!
கும்!


கௌட்ஸ் வீழ்ந்தான் - அன்னி மாடஸ்டியிடம் ஓடினாள்
வில்லி! இத்தனை நேரமும் கையில் ரைபிளோடு நீ ஹெலிகாப்டரினுள் இருப்பதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தோம்!
சூழ்ச்சியே அதுதான்!
ஹெலிகாப்டரினுள் நீ இல்லையெனில்...? கடவுளே... மாடஸ்டியை எதிரிகள் எந்த கணமும் சுட்டு வீழ்த்தியிருப்பார்களே...
உயிரை பணயம் வைத்து ஆடிய நாடகம்தான்!
மாடஸ்டி உனக்கு அடிபடவில்லையே...
மேலோட்டமான சிராய்ப்புகள் மட்டும்தான்...
... வில்லி! ஏன் நீங்கள் ஏதும் பேசாமல் மூச்சுவிட சிரமப்பட்டுக் கொண்டு நிற்கிறீர்கள்!
ஒரு சிறு பிழை நேர்ந்திருந்தால் - என்று எண்ணிப் பார்த்தேன்...
என் திறமை மீது உங்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டதா என்ன?



கௌட்ஸ் மூர்ச்சை தெளிந்து எழுந்தான்
அந்த ஹெலிகாப்டரை உங்களால் ஓட்டிச் செல்ல முடியுமா?
முடியும் என்று நம்புகிறேன் -கண்ட்ரோல் அமைப்புக்களை ஒரு நோட்டம் விட்டால்... ...சூட்சுமம் புரிந்துவிடும்!
... மாடஸ்டி....
நான் தோற்றுப் போய்விடவில்லையடி ராட்சஸி.. வா -சண்டையை தொடருவோம்...
பலப்பரீட்சை அல்ல--- இது...! நான் வந்த காரியம் கைகூடிவிட்டது -அத்தோடு விஷயம் முடிந்தது!
உன்னை விடமாட்டேன் -வா!
அம்ப்ரோஸ்...! மீண்டும் சண்டையில் இறங்கிவிட மாட்டாளே?
அந்த அளவுக்கு மாடஸ்டி அறிவு கெட்டவளல்ல!



நம்மில் யார் வல்லவர்கள் என்று நிரூபிக்க மீண்டும் நான் சண்டையிட வேண்டும் என நீ எதிர்பார்ப்பது மடத்தனம் எதையும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை!
உயிரோடு விட்டேனே என்று சந்தோஷப்படு...! நான் சண்டைபோட மறுப்பதால் வெற்றி உனக்குத்தான் என்று கூட நீ வைத்துக் கொள்ளலாம்... - நாங்கள் போகிறோம்!
சட்டென்று குனிந்து தன் காலணியில் மறைத்து வைத்திருந்த கத்தியை உருவி எடுத்தான் கௌட்ஸ்
கண்ட்ரோலை ஓரளவு புரிந்து கொண்டு விட்டேன் இளவரசி
இளவரசி... அசையாதே
மாடஸ்டி உறைந்துபோய் சிலை என நிற்க, அவளுடைய தலைக்கு மேலே சீறிக் கொண்டு போனது வில்லி வீசிய கத்தி...
சதக்!
நான் தோற்றுவிட்டதாக சொல்லிக்கொண்டு அவன் போயிருக்கலாம் வில்லி!


செத்துவிட்டான்!
அந்த நோக்கத்தோடுதான் எறிந்தேன்!
ஏன்? காயப்படுத்தினால் போதாதா?
கத்தி செருகிய பின்னரும் முன்னேறி வருமளவுக்கு பலம் படைத்தவன் கௌட்ஸ்...! உன்னைக் கொல்ல அரை வினாடி நேரம் அவனுக்கு கிடைத்தால் போதுமே!
இந்த கேஸில் நீ பலமுறை உயிரை பணயம் வைத்திருக்கிறாய்... அதற்கு ஒரு முடிவு வேண்டும் என்றுதான் -
உங்களுடைய கணிப்பு ரொம்ப சரி... வில்லி!
KA-26 ரக ஹெலிகாப்டர் இது... என்னால் ஓட்டிச் செல்ல முடியும் என்றே தோன்றுகிறது!
மாடஸ்டி எங்கே போனாள்?
மற்ற இரு போக்கிரிகளையும் கட்டவிழ்த்து விட்டு வர! நெடிய நடைப்பயணம் அவர்களுக்கு கட்டாயமாகிவிட்டது.
எங்களை எங்கே கொண்டு போக உத்தேசம்?
முதல்கட்டமாக ஸ்வீடிஷ் உளவுத்துறை ஆசாமியை ஏற்றிக் கொள்கிறோம்... பிறகு, உங்களுடைய ஜனங்கள் இருக்குமிடத்தில் இறங்கி நீங்கள் பத்திரமாக இருப்பதாக தெரியப்படுத்துவோம்...


உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி...
நானும் அன்னியும் இனி மீண்டும்
நிம்மதியாக வாழலாம்
எல்லையருகே இருக்கும் லாப்லாந்தில்-
அந்த நிம்மதி கிட்டாது அம்ப்ரோஸ்...
... எங்களோடு
நாடு திரும்ப வேண்டும்
ஆனால் இங்கிலாந்தில் அன்னிக்கு
மகிழ்ச்சி கிட்டாது.மேலும், நான் என்
ஆராய்ச்சியை முடிக்க எளிய சூழல்
தேவை ...
மாஸ்கோவை விட இங்கிலாந்து
எவ்வளவோ மேல்.உங்களுடைய சகா
இன்ஸ்டைன் சொன்னது போல் எல்லாமே
ஒப்பீட்டில் இருக்கிறது!
மாற்று யோசனைக்கே இடமில்லை!
இலண்டன் - மாடஸ்டியின் ஆடம்பர
மாளிகைக்கு ஸர் ஜெரால்டு விஜயம்
செய்தார்...
உன்னை எப்படி பாராட்டுவது என்றே
தெரியவில்லை!
அலட்டிக் கொள்ளாதீர்கள் - KGB யினர்
புரபஸர் லாம்பெர்ட்டை கடத்திச்
செல்வதில் தீவிரமாக இருக்கிறார்கள்
என்று கதை விட்டு எங்களை நம்ப
வைத்தீர்கள்
நிஜமாகவே நடந்தது அதுதானே?
அதுதான் நடந்தது... ஆனால் அது
நீங்களே எதிர்பாராதது!-அம்ப்ரோஸை
இங்கே கொண்டு வர எங்களை
வற்புறுத்தும் சூழ்ச்சிதான் உங்களுடைய
நாடகம்
அதற்காக நீ எனக்குநன்றி அல்லவா
சொல்ல வேண்டும்
ஏன்,... எதற்காக?


நான் சொன்னது பொய் என்ற போதிலும் அதனால் தூண்டப்பட்டு நீங்கள் அங்கே போனதால்தானே நெருக்கடியிலிருந்து அம்ப்ரோஸை காப்பாற்ற முடிந்தது.
வில்லி... ஸாருக்கு குடிக்க குளிர்ச்சியாக ஏதாவது கொடுங்கள் - முதலில்!
முதலில்? - சரி... புரபஸர் எங்கே? நீ திரும்பி வந்ததும் தகவல் வரும் என்று ஒரு மாதமாக காத்திருந்தேன்!
அலாஸ்காவில் மனைவியோடு சுகமாக காலம் கழித்து வருகிறார் புரபஸர். நன்றி!
கடவுளே - நெத்தி அடி!
எதற்காக அவர்களை அங்கே அனுப்பி வைத்தீர்கள்?
ஏன்? அங்கே அவர்கள் பத்திரமாக, சந்தோஷமாகத்தான் இருக்கிறார்கள்!
புதிய சங்கேத மொழியை மொழி பெயர்க்கத்தான் அவரை இங்கே கொண்டு வர திட்டமிட்டோம்!
அது உங்களுடைய திட்டம்!
கவலைப் படாதீர்கள்... உங்களுடைய காரியத்தை ஏற்கனவே அவர் செய்து முடித்துவிட்டார்!
புரியவில்லையே!



ஸ்வீடிஷ் உளவுத்துறை எங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருந்தது. புதுவகை சங்கேத குறிகளின் மாதிரிகள் நிறைய அவர்கள் வசம் இருந்தது... எனவே, வழியில் ஸ்டாக்ஹோமில் இருவாரங்கள் தங்கினோம்... அப்போது அம்ப்ரோஸ் புதிருக்கு விளக்கம் கண்டறிந்தார்
இதை CIA க்கு விற்க நீங்கள் முற்படாதீர்கள்!
ஆனால் அவர்கள் வாரிக் கொடுக்க முன் வருவார்களே - உளவுத்துறைக்கு ஏகப்பட்ட பணம் கிடைக்குமே!
அந்தத் தொகை அம்ப்ரோஸுக்கு அல்லவா போய்ச் சேரவேண்டும்
அதுதானே நியாயம்?
வில்லி... தியேட்டருக்கு நேரமாகிவிட்டது - புறப்படுவோமா?
பொறு...! இது நுணுக்கமான விஷயம்...! இதை CIA க்கு விற்க உனக்கு அதிகாரம் கிடையாது!
அவர்களுக்கு நாங்கள் சும்மா கொடுத்து விடலாம் என்கிறீர்களா?
இல்லை! மற்ற நாட்டு உளவுத்துறையினரோடு பேரம் பேசும் உரிமை எனக்கு மட்டும்தான் உண்டு உங்களுக்கு இல்லை என்று சுட்டிக்காட்டவே அப்படிச் சொன்னேன்!
லாம்பெர்ட்டை அழைத்து வர வேண்டும் என்று சொன்னீர்களே தவிர - எங்கே என்று சொல்லவில்லையே? அவர் ஜாலியாக அமெரிக்காவில் C.I.A. பாதுகாப்பில் இருக்கிறார்! டாடா! பைபை!
முற்றும்

# மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செ. சந்திர சேகரன் |
| படிப்பு | : | (இப்போது) பி.ஏ. பொருளாதாரம் (Final) |
| முகவரி | : | 148, கன்னிமாரம்மன் கோவில் தெரு, தென்காசி - 627 811. |
| லயன் அறிமுகமானது | : | என் சகோதரனால் |
| பிடித்த ஹீரோ | : | காமெடி கௌபாய்- லக்கி-லூக்,டெக்ஸ் |
| ஆரம்பம் | : | 1989-ல் |
| படிக்கும் மற்ற இதழ்கள் | | லயன், முத்து, புதிய பார்வை, FILM FARE, STAR DUST. |
| குடும்பத்தில் படிப்பவர்கள் | : | சகோதரன், அப்பா, சித்தி, என் தோழி. படித்த பின் அனைத்தையும் அப்படியே சேர்த்து வைத்துள்ளேன். ஓரிரு இதழ்கள் MISSING) |
| குறை | : | என் ஊரில் இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை. அதனால் திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு காமிக்ஸ் வாங்க செல்ல வேண்டியதாய் இருக்கிறது. |

இரண்டாம் உலக யுத்தத்தை 'பட்'டென்று முடிக்கும் வேகத்தில் ஜப்பானின் ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுகுண்டு மழை பொழிந்தது! குண்டு வீச்சு ஏற்படுத்திய பிரளயத்தில் சின்னாபின்னமான பல லட்சம் குடும்பங்களில் இளம் கெய்ஜியும் ஒருவன்! இது அவனது கதை... 1946-ஆம் வருஷம்—




'நான் மூன்றாம் வகுப்பு படித்தபோது எரிந்து தரைமட்டமான ஹிரோஷிமா நகரில்.மீண்டும் வீடுகள் எழுந்தன.'
'என் அம்மா எப்படிக் கடினமாக உழைத்தாள் என்பது தெரியும். ஆனாலும் நாங்கள் இன்னும் ஏழ்மையிலேயே இருந்தோம். உணவுக்காக எப்போதும் போராடிக் கொண்டே இருந்தோம்.'
'நானும் எனது சகோதரனும் கருகிப் போய்க் கிடந்த இடங்களில் உருளைக் கிழங்குகளையும் சில வகைப் பழங்களைப் தோண்டி எடுத்தோம்.'
இந்தக் கண்ணாடி பழைய விலைக்கு 10 யென் பெறுமா?
நோ! 5 யென் தான் பெறும்!
'எங்களுடைய கைச் செலவிற்காக உருக்குலைந்த உலோகங்களையும் கண்ணாடிகளையும் சேகரித்து கள்ள மார்க்கெட்டில்.விற்றோம்.'
அது பூனை அல்லது நாயின் இறைச்சியாக இருக்கும், ஷோஜி!
வாங்க வாங்க .15 யென்களுக்கு ஒரு கோப்பை நிறைய ருசியான இறைச்சி!
'இந்த காலகட்டத்தில் முதல் தடவையாக என் கண்களில் ஷின் -தகராஜிமா புத்தகம் பட்டது. இந்த காமிக்ஸ் புத்தகம் ,
முரட்டு அட்டை போட்டு வெளியிடப்பட்டிருந்தது.'


'நான் படித்த முதல் காமிக்ஸ் புத்தகம் இதுதான். முழுவதுமாக அந்த புத்தகத்தால் ஈர்க்கப்பட்டேன்.'
'புத்தகக் கடைகளில் முழுவதுமாக காமிக்ஸ் இதழ்கள் காணப்பட்டன.'
ஹேய்! பொடிப்பயலே! புத்தகத்தைப்படித்து விட்டு வாங்காமலா ஓடுகிறாய்?
உனக்கு பே! பே!! கிழவா!!
'காமிக்ஸ் கதைகளால் நான் கவர்ந்திழுக்கப்பட்டேன்.'
クズ鉄買い口
'உருக்குலைந்த உலோகங்களை சேகரித்து அவற்றை விற்று புத்தகம் வாங்க பணம் சேமித்தேன்.'
'அதன் பின் பழைய பேப்பர்களைச் சேகரித்து நானாகவே படங்களை வரைந்தேன்.'
'நான் கேலிச் சித்திரங்களை வரைந்தபோது எனக்கு நண்பர்கள் தேவைப்படவில்லை.'
'எனக்குப் பிடித்தமான பொழுது போக்கே கார்டூன் படங்கள் வரைவதும்; ஹிரோஷிமா ரயில் நிலையம் அருகில் உள்ள சினிமா தியேட்டருக்குப் போவதும் தான்!'
ノートルダムの せむし男
'ஒரே சினிமாவை சாப்பிடக்கூடப் போகாமல் மீண்டும் மீண்டும் பார்ப்பேன்!'
'இப்படிப் படம் பார்த்ததால் என்னுடைய சித்திரம் வரையும் ஆற்றலில் முன்னேற்றம் இருப்பதை பின்னர் உணர்ந்தேன்!'


ஓடும் ரெயிலில் இருந்து, கிரே கூப்பர் இப்படித்தான் தாவினார்! வாவ்!
அச்சச்சோ, இப்ப மணி 5 ஆகிவிட்டதே. நான் போகணுமே!
உடனே வீட்டுக்குப் போகணுமா, நகஸாவா?
'எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களை விட்டுவிட்டுப் புறப்பட்டேன். கடினமாக வேலைசெய்து விட்டு வரும் என் அம்மாவுக்காக ஒவ்வொரு நாள் இரவும் நான் தான் சமையல் செய்ய வேண்டும்!'
உஷ் உஷ்
'நான் நடுநிலைப்பள்ளிக்கு காலடி எடுத்து வைத்த போதும் காமிக்ஸ் மீதான மோகம் குறையவில்லை'
உஷ்ஷ்...
டட் டட் டட்!
'நடுநிலைப் பள்ளியில் பெரும்பாலான நேரத்தை நாங்கள் அங்குகிடந்த கற்களை அகற்றுவதிலும் விளையாட்டு மைதானத்தை சுத்தப்படுத்துவதிலும் செலவிட்டோம்.'
'எங்களுடைய வீடு எப்போதும் போல் ஏழ்மையாகவே இருந்தது. அம்மா மேலும் கடினமான வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்'

தொடரும்.

# ஆண்டுச் சந்தா

லயன் காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 75/-

முத்து காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 60/-

ஓராண்டுக்குக் குறைவான சந்தா

ஏற்க இயலாது.

## '96 தீபாவளி மலர் முன்பதிவுக் கூப்பன்

பெயர் : ________________ வயது : ________

முகவரி : ________________ ________

பின்கோடு: ________

முன்பண : மணி ஆர்டர்/போஸ்டல் ஆர்டர்/ டிராப்ட்
விபரம்

தபால் செலவு சேர்த்து பிரதியின் விலை ரூ. 18/-
பதிவுத் தபாலில் பெறுவதானால் விலை ரூ. 21/-

# மாதம் ஒரு ஹீரோ!



| | |
|---|---|
| பெயர் | : பார்னே |
| வயது | : அரைக்கிழம் என்பது உறுதி! |
| கல்வித் தகுதி | : ஹி! ஹி! ஹி! |
| தொழில் | : மாலுமி |
| பொழுது போக்குகள் | : உற்சாக பானம்; அடிதடி etc.. etc... |
| விரும்புவது | : ''கழுகில்'' நிம்மதியான பயணம் |
| விரும்பாதது | : அதிரடியாய் குறுக்கிடும் adventure களை |
| நம்புவது | : கேப்டன் பிரின்ஸ் & பொடியன் ஜின் |
| நம்பாதது | : தன் தைரியத்தை! |
| மற்ற பெயர்(கள்) | : தாத்தா; குடிகாரக் கிழம் |
| சாதனை | : உலகமெங்கும் சுற்றி வாசகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தது. |
| நீண்ட கால சாதனை | : வெற்றிக்கு வயதோ - அழகோ அவசியமில்லை என்பதை நிலைநாட்டியது! |

# வாசகர் ஹாட்-லைன்!



Dear விஜயன் சார்,

மேடையில் ஒரு மன்மதன் பதிப்பில் திரு. K. பாலசுப்ரமணியம் எழுதியிருந்த கடிதம் கண்டேன்... வருத்தம் கொண்டேன்.

கடந்த ஒரு வருட காலமாக நான் சந்தித்த துரோகங்கள், இழப்புகள், வேதனைகள் அனைத்தையும் தாண்டி இன்னமும் உயிரோடு, வாழ்க்கை மீது பிடிப்புடன்; வாழவேண்டும் என்ற தவிப்புடன் உலாவிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் - நம்பினால் நம்புங்கள் - உங்கள் காமிக்ஸ் தான். (இதை நான்கைந்து மாதங்களுக்கு முன்பு எனது பேனா நண்பர்கள் திருச்சி L. வெங்கடேஷ்வரனுக்கும்;சென்னை T. முருகனுக்கும் எழுதியிருக்கிறேன்). நமது லயனில் வரும் ஹீரோக்கள் சிலர் படும் மரண அவஸ்தைகள்... நான் ஹாஸ்பிடலில் அனஷ்தீஷியா மயக்கத்தில் கிடந்த போதும் சரி; மயக்கம் தெளிந்து வலியில் துடித்த போதும் சரி..; இந்தத் துன்பங்கள் எல்லாம் நமது ப்ரின்ஸ், XIII,ப்ளைசி போன்றோர் படும் துயரங்களுக்கு முன் தூசு என்று எத்தனை முறை எண்ணி ஆறுதல் கொண்டிருக்கிறேன் தெரியுமா? லயன் காமிக்ஸ் டைட்டில்கள் தமிழ்பட டைட்டில்களுக்கு மோசம் போகவில்லை. மொழிபெயர்ப்பு சரியில்லையாம்... வெறிநாய் வேட்டையில் ''அமுதமா... இல்லை, தண்ணீர்! என் ஜீவன் துளித்தது.'' இந்த ஒரு பருக்கை போதும் ஒரு பானை சோறு எப்படி ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு. உணர்வுப் பூர்வமான கதைகளும், அதற்குத் தகுந்தாற் போன்ற ஓவியங்கள் வரைந்துள்ளதையும் ரசிக்காமல் சிலர் ஹீரோக்கள் எப்போதும் 'சிண்டை'ப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றே நினைக்கின்றனர். அவர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் மதிப்பளிக்க வேண்டியதில்லை. நமது லயன் ஒரு 'பட்டை தீட்டிய வைரம்'. அது புரியாமல் வாசகர் போடும் குட்டுக்கு நீங்கள் பதில் சொல்லியிருப்பது என்னை கடிதம் எழுதவைத்து விட்டது: மறுபடியும் சொல்கிறேன்... ''லயனே லயனுக்கு என்றும் நிகரானவன்!''

அன்புடன் தங்கள்,
**பாரதிநந்தீஸ்வரன்.**

***ஆசிரியர் குறிப்பு :*** சிண்டு முடியும் நோக்கம் நிச்சயமாக நமக்குக் கிடையாது! ஆதங்கத்துடன் கருத்துத் தெரிவித்துள்ளதொரு வாசகரின் கடிதம் இது! அவ்வளவே!

**– லயன்**

அடுத்த வெளியீடு!



# மாடஸ்டி பிளைஸி

தோன்றும்

# புலி வருது!

